# அதிகபடியான முடிவளர்ச்சி (Hirsutism)

ஒரு பெண்ணுக்கு உடம்பின் சில பகுதிகளில் ஆண்களைப்போல் அதிகமாக முடிவளர்தல் Hirsutism என அழைக்கப்படுகின்றது.

1. **இதற்கான அறிகுறிகள் என்ன?**
   மேல் உதடு, கன்னம், மார்பு, மற்றும் நடு வயிற்றில் அடர்த்தியான முடிகள் வளர ஆரம்பிக்கும். சிலருக்கு தொடை மற்றும் பிருஷ்டம் பகுதிகளிலும் அதிக முடி வளரலாம். இது பரம்பரையாகக் கடத்தப்படுவதில்லை.

2. **இந்த நோய்க்கான காரணம்**
   - உடலில் சுரக்கும் Androgen எனப்படும் ஹோர்மோன் அதிக படியாக சுரப்பதும் அல்லது அந்த ஹார்மோனுக்குரிய உணர்திறன் அதிகரிப்பதும் ஆகும். (கருப்பை மற்றும் அட்ரீனல் சுரப்பிகளில் இருந்து Androgen ஹார்மோன் சுரக்கப்படுகிறது).
   - இந்நோய் காணப்படும் 25சதவீத பெண்களில் இதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. அத்துடன் மாதவிடாய் நின்ற பிறகும் இது சிலருக்கு ஏற்படாலாம்.
   - இளம் பெண்களில் இது ஏற்படுவதற்கான முக்கிய காரணம் Polycyctic Ovarian Syndrome.
   - அரிதாக சில மருந்துகளாலும் (Steroid ) ஹார்மோன் மற்றும் ஹார்மோன் சுரக்கும் சுரப்பிகளில் ஏற்படும் மாற்றத்தாலும் இது ஏற்படலாம்.

**அதிகப்படியான முடிவளர்ச்சியின்போது உடனடியாக மருத்துவ ஆலோசனையை பெறவேண்டிய சந்தர்ப்பங்கள்**

- பூப்படைவதற்கு முன் அதிக முடிவளர்ச்சி இருத்தல்.
- மாதவிடாய் சக்கரத்தில் மாற்றங்கள் ஏற்படுதல்.
- உடற்பருமன் அதிகரித்தல் மற்றும் நீரிழிவு நோய் கண்டறியப்படுதல்.
- தலைமுடி உதிர்தல், வழுக்கை, குரல் தடித்தல் மற்றும் ஆழமடைதல் போன்ற அறிகுறிகள் இருத்தல்.

3. **இதற்கான சிகிச்சை முறைகள் என்ன?**
   - முதலில் இதற்கான காரணத்தை அறிய ஹார்மோன் சோதனைகள் மற்றும் வயிறு Scan செய்யப்பட வேண்டும்.
   - ஹார்மோன்களில் அசாதாரணம் உறுதிப்படுத்தப்படுமானால் நீங்கள் இது சம்பந்தமான வைத்திய நிபுணரிடம் பரிந்துரைக்கப்படுவீர்கள்.
   - அத்துடன் அதிக படியான முடி பிற சிகிச்சை முறைகளால் அகற்றப்படுகிறது.

**i)நோயாளியின் சுயமருந்து (நோயாளியினால் தானாக செய்யக்கூடியவை)**

- **Shaving சிகிச்சை**

Shaving Razor உதவியுடன் தேவையற்ற முடியை அகற்றலாம். இதன் மூலம் முடியை நீக்குவதால் அதிக முடி வளரக்கூடும் என்பது ஒரு கட்டுக்கதை. ஆனால் மீண்டும் மீண்டும் செய்யும் போது தோல் ஒவ்வாமை ஏற்படலாம்.

- **Waxing சிகிச்சை**

இதன் மூலம் உடலில் தேவையற்ற முடியை எளிதில் அகற்றலாம். ஆனால் இது முகத்தில் முடியை அகற்றுவதற்கு ஏற்ற முறையல்ல. இதனால் மயிர்கால்களில் கிருமிதொற்று மற்றும் வடு ஏற்படலாம்.

- **Depilatories** (வேதிப்பொருட்களின் உதவியுன் தேவையற்ற முடியை அகற்றுவது)

இதனை செய்வதற்கு முன்பு இது உங்கள் சருமத்திற்கு பொருத்தமானதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது தோல் ஒவ்வாமை ஏற்படலாம்.

- **ப்ளிச்சிங் Creams**

இவை முகத்தில் காணப்படும் கருமையான முடிகளை வெள்ளை நிறமாக மாற்றும். எனினும் இது பொதுநிறம், மாநிறமானவர்களுக்கு பொருத்தமான முறையல்ல.

**ii)மருத்துவரின் ஆலோசனையுடன் முடியை அகற்றுதல்**

- **Electrolysis** (மின்சாரத்தை பயன்படுத்தி)

மிக நுண்ணிய ஊசியின் உதவியுடன் மயிர்க்காலினுள் மின்சார அலைகளை பயன்படுத்தி மயிர்கால்களை அழித்தல். இது ரோமத்தை முழுமையாக அழிக்கின்றது. வடு ஏற்படும் அபாயம் உள்ளது.

- **Laser சிகிச்சை**

இதன்மூலம் நிரந்தர தீர்வு பெறலாம். ஆனால் பலமுறை சிகிச்சை தேவைப்படும். அரிதாக பக்கவிளைவுகள் ஏற்படலாம். (சிவத்தல், நிறமாறறம், வடு) இந்த சிகிச்சையின் போது Sunscreen கட்டாயமாக பாவிக்க வேண்டும். முடியை அகற்றும் முறைகளில் Shaving தவிர மற்ற முறைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**iii)மருந்தியல் சிகிச்சை முறைகள்.**

- **Anti-Androgens**

இது ஹார்மோனின் செயற்பாட்டை அல்லது உற்பத்தியை தடுக்கிறது. வெற்றிகரமான முடிவுகள் பெற பல மாதங்கள் அகும்.

- **Oral contraceptives** (கருத்தடை மாத்திரைகள்)

இது ஹார்மோனின் செயற்பாட்டை தடுக்கின்றது. எனவே முடிவளர்ச்சி குறைகிறது. மார்பகவலி, குமட்டல், தலைவலி, மற்றும் இரத்தப்போக்கு ஆகியவை பக்கவிளைவுகளாகும்.

- **Cyproterone**

இது ஹார்மோனின் செயற்பாட்டை தடுக்கின்றது. எடை அதிகரிப்பு, மனச்சோர்வு, இரத்தம் உறைதல், மற்றும் பாலியல் ஆசைகுறைதல் இதன் பக்கவிளைவுகளாகும்.

- **Spironolactone**

பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் இதனை உட்கொள்வதன் மூலம் முடி வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம். சிறு நீர் அதிகமாக கழித்தல், மாதவிடாய்

சுழற்சியில் மாற்றம் போன்றன ஏற்படலாம். மற்றும் அரிதாக ஈரல் செயற்பாட்டை பாதிக்கும்.

- **Finasteride**

இது மாதவிடாய் நின்ற பெண்களுக்கு மட்டுமே பரிந்துரைக்கப்படுகின்றது. இது Androgen ஹார்மோன் உற்பத்தியை தடுக்கின்றது.

Anti androgens கர்ப்பகாலத்திலும் மற்றும் திருமணமான பெண்களும் பயன்படுத்தக்கூடாது. அப்படி பாவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பிறப்புகட்டுபாட்டு முறைகளை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறார்கள்.